# குணநல மாற்றம்
# (Character transformation)

## தேவ நற்குணங்களில் வளர்வதில் யோபுவும் மற்றவர்களும் முன்மாதிரிகளாகத் திகழ்ந்தனர்.

சிறுவர்களுக்குக் கற்பிப்பவர்கள் C1b பாடத்தை வாசிக்கவும்

ஜெபம்: "பிதாவே! நானும், என்னால் மேய்க்கப்படுபவர்களும் கிறிஸ்துவுக்குள் வளர இந்தப் பாடத்தின் மூலமாக உதவுவீராக!"

## 1. கிறிஸ்துவைப் போன்று குணநலன்களைக் கட்ட ஆயத்தமாகுக.


**பின்னணி:**

யோபு மிகவும் பாடுகளை அனுபவித்தான். அதைக்குறித்து தேவனோடு விவாதித்தான். தேவனை விசுவாசிப்பதில் உறுதியாக நின்றான்.

யோபு நீதிமான். ஆனாலும் எல்லாம் வல்ல தேவன் தமக்குரிய இரகசிய வழிகளில் செயலாற்றுவதை அனுமதிக்க அவன் கற்றுக்கொள்வது அவசியமாய் இருந்தது.

விசுவாசத்தோடும் பொறுமையோடும் பாடுகளை சகித்துக் கொள்வதே, தேவ குணநலன்களை வளர்க்கும்.

சும்மா ஒருவரைக் கடிந்துகொள்வதால் அவர் முன்னேறமாட்டார் என்பதையே யோபுவுக்கு எதிரான நண்பர்களுடைய குற்றச் சாட்டு புலப்படுத்துகிறது. யோபுவின் அறிவற்ற நண்பர்களைப் போலவே சில மேய்ப்பர்களும் மக்களை பலவந்தத்தால் நல்லவர்கள் ஆக்க முயற்சி செய்கிறார்கள். அவர்கள் கடிந்துரைத்து, யோபுவை குற்ற உணர்வுக்கு உள்ளாக்க முயன்றனர். இதற்கு மாறாக, கிறிஸ்தவர்கள், தேவனை அறிந்து கொள்ள மற்றவர்களுக்கு உதவ வேண்டும். பரிசுத்த ஆவியின் வல்லமையால் ஒருவருக்கொருவர் சேவை செய்ய வேண்டும்.



**கீழ்வரும் உண்மைகளை யோபு 1 -ம் அதிகாரத்தின் காண்க:**

- வெளி.12:10 ஏன் சாத்தானை நமது 'சகோதரர் மேல் குற்றம் சாட்டுகிறவன்' என்று கூறுகிறது?
- யோபுவின் விசுவாசத்தையும் குணநலனையும் சோதிக்க என்ன செய்யலாம் என்று சாத்தானை தேவன் அனுமதித்தார்?

**அதிகாரம் 2 ல் காண்க:**

- யோபுவின் மேல் இன்னும் அதிக துன்பத்தை செய்யுமாறு சாத்தானை தேவன் அனுமதித்தார்.
- யோபுவைத் தேற்ற வந்த அவனது மூன்று நண்பர்களின் பெயர்கள்.

**அதிகாரம் 3** ல்  தான் பிறந்த போது என்ன நடந்திருக்க வேண்டும் என்று யோபு விரும்பினான்.

**அதிகாரம் 4-5** ல் யோபுவின் வேதனைக்கு காரணம் என்ன வென்று எலிப்பாஸ் எண்ணியவைகள்.

*(பதில்கள்: 4:7-8 ஐ ப் பார்க்கவும். மற்றவர்களைக் குற்றம் சாட்டி நியாயம் தீர்க்கும் பலரைப் போலவே எலிப்பாசும், யோபு செய்த தீமையின் காரணமாகவே தேவன் அவனைத் தண்டிக்கிறார் என்று தவறாக எண்ணிக்கொண்டான்).*

**அதிகாரம் 6-11 ல் காண்க.**

- 6:21-30 ல், எலிப்பாசின் ஆலோசனையைப் பற்றி யோபு என்ன நினைத்தான்?
- அதிகாரம் 8ல், யோபுவின் மறுமொழி குறித்து பில்தாத் என்ன எண்ணினான்.
- அதிகாரம் 9-10 ல், தன் நண்பர்கள் என்ன செய்யவேண்டும் என்று யோபு விரும்பினான்.
- அதிகாரம் 11ல், யோபுவின் துன்பத்துக்கு என்ன காரணம் என்று சோப்பார் விரும்பினான்.
- (வச.13-15).12:1-3ல், தனது மூன்று நண்பர்களின் ஆலோசனை பற்றி யோபு என்ன எண்ணினான்.

**அதிகாரம் 12-31**ல் நான்கு பேரும் இரண்டாம் முறையாக விவாதம் செய்கின்றனர். **காண்க.**

- 12:1-3ல் தனது மூன்று நண்பர்களின் ஆலோசனை குறித்து யோபு என்ன எண்ணினான்.
- 19:23-27 ல், யோபுவின் கடைசி நம்பிக்கை.



**அதிகாரம் 38-41**ல், ஒரு சுழற்காற்றில் இருந்து பேசிய தேவன், யோபுவை கடினமான கேள்விகள் கேட்கிறார். **காண்க.**

- 38:1-3 ல் மூன்று முதிய ஆலோசகர்களையும் பற்றி கர்த்தர் என்ன நினைத்தார்?
- 38:4-5 ல், யோபுவின் அறியாமையை வெளிப்படுத்த, கர்த்தர் யோபுவிடம் என்ன கேட்டார்.

**அதிகாரம் 32-37**ல், எலிப் பேசுகிறான். மூன்று முதிர்ந்த ஆலோசகர்கள் மேலும் அவனுக்கு ஏன் கோபம் வருகிறது என்பதை 32:3-10ல் காண்க.

**அதிகாரம் 42,** இறுதி விளைவுகளை வெளிப்படுத்துகிறது. காண்க.

- 42:1-6 ல் தன்னைப் பற்றியும், தன் மனநிலை மாறுதல் பற்றியும் யோபு எவ்வாறு உணர்ந்தான்?
- 42:7-8ல், மூன்று முதிர்ந்த மனிதர் மேலும் கர்த்தருக்கு ஏன் கோபம் மூண்டது? அவர்களை என்ன செய்யச் சொன்னார்?
- 42:10-17ல் கடைசியாக நிகழ்ந்தவை என்ன?

1 பேதுரு 1:3-9ல் கிறிஸ்துவுக்காகத் துன்பப் படுவதினால் கிடைக்கும் பல பலன்கள்.

## 2. இந்த வாரத்தில் செய்ய வேண்டிய காரியங்களைத் திட்டமிடுக.

தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு, அவரது மகத்தான உருமாற்றும் வல்லமையைப் பெற்றுக் கொள்ளுமாறு மக்களை ஊக்கப்படுத்தவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

சவுலை மன்னித்த தாவீதைப் பற்றி நாடகம், கேள்விகளை தயாரித்து வழங்குமாறு **பிள்ளைகளிடம்** வேண்டவும்.

யோபுவில் உள்ள (பகுதி 1) முக்கிய விஷயங்களைக் கூறவும் அல்லது **நடித்துக் காட்டவும்.** நீங்கள் அறிந்து கொண்டதைப் பற்றி கேள்விகள் கேட்கலாம்.

இவை பற்றி கலந்துரையாடவும், ஜெபிக்கவும், நடவடிக்கைகளைத் திட்டமிடவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவும் **சிறு குழுக்களை** அமைக்கலாம்.




கலா.5:22-23 ஐ **மனப்பாடம் செய்க.**

**கர்த்தின் பந்தியை** அறிமுகப்படுத்த, யோபு தன் நண்பர்களுக்காக செய்த இரத்த பலியைப் பற்றி யோபு 42:7-8 லிருந்து கூறுக. நமது எல்லா அவமானகரமான காரியங்களையும் கிறிஸ்துவின் இரத்தம் எவ்வாறு மூடுகிறது என்பதை விளக்குக.

வேதாகமப்படியான ‘சரீர’ வாழ்க்கையை **விளக்கவும்.**

- வேதத்தின் படி தெய்வீக குணநலன்களைக் கட்டுவது என்பது ஒரு குழு முயற்சி. நாம் அதைத் தனியாகச் செய்வதில்லை.
- ஒருவருகொருவர் அன்போடு சேவை செய்ய பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய வரங்களைத் தருகிறார் (1கொரி.12,13).
- சபை அங்கத்தில் பங்கேற்று மற்றவர்களுக்கு சேவை செய்யும்போது நாம் குண நலன்களில் வளர்ச்சி அடைகிறோம். உதாரணமாக, மது அருந்துவோர் அப் பழக்கத்தை கைவிடுமாறு மற்றவர்களுக்கு உதவும்போது தங்கள் பழக்கத்தையும் மேற்கொள்ளுகின்றனர்.

சில மக்கள் பொதுவான விலங்குகளின் குணங்களைக் காட்டுவதை **விளக்குக.**

| சில மனிதர்கள் இவ்வாறு நடந்து கொள்ளுகின்றனர். | பரிசுத்த ஆவியானவரை புறக்கணிக்கும் போது | பரிசுத்த ஆவியால் நிறையும் போது |
|---|---|---|
| வலிமையான காளைகளாக பவுலைப் போல  | ஸ்தேவானை கல்லெறிவதில் பவுலும் பங்கேற்று விசுவாசிகளை துன்புறுத்தினார் | பின்னர், மந்தைகளை உருவாக்குவதில் எதிர்கொண்ட எதிர்ப்புகளை சகித்து, மேய்ப்பர்களைப் பயிற்றுவித்து பல சமுதாய மக்களுக்கு வார்த்தைகளை எடுத்துச் சென்றார். |
| பேதுருவைப் போல, குரைக்கும் நாய்க் குட்டிகள்  | பேதுரு பொதுவாக அவசரப்பட்டு பேசினார். இயேசு மரிக்க வேண்டும் என்ற திட்டத்தை எதிர்த்து, அவரை மறுதலிக்கவும் செய்தார். | பின்னர் பேதுரு இயேசுவைப் பற்றி வல்லமையாக சாட்சி கொடுத்து பலரை விசுவாசத்திற்குள்ளும் மனம் திரும்பு தலுக்குள்ளும் வழிநடத்தினார். |
| தாவீதைப் போல, தொலை நோக்குடைய கழுகுகள்  | தாவீது திருட்டுத் தனமாக தன் வீரர்களை எண்ணியதால் வாதை வந்தது. உரியாவின் மனைவியை மோகித்தான் | தாவீது அழகிய சங்கீதங்களை எழுதினான், புதிய தேவாலயத்துக்கு திட்டமிட்டான். ஒரு நித்திய ராஜ்யத்தை நம்பினான். |
| யோபுவைப் போல, சீராக உழைக்கும் குதிரைகள்  | தேவன், அதிகமாகத் தன்னை துன்பப்பட வைத்ததை யோபு கேள்வி கேட்டு அதிகமாக வாதிட்டான். | இருந்தாலும், மிகுந்த துன்பத்துக்கிடையிலும் யோபு பலமான விசுவாசத்தை காத்துக் கொண்டான். தான் கேள்வி கேட்டதைக் குறித்து மனம் வருந்தினான். |